[1975 மார்ச் 5

Admission of students for Engineering Course

*184 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that selection of students for admission to Engineering Colleges in Tamil Nadu has been made by the Selection Committee this year; and

(*b*) the number of students selected?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1,228 பேர்.

திரு. என். கே. பழனிசாமி: சார், நம்முடைய கல்வியினுடைய அடிப்படை ஜாப் ஓரியன்டட் என்பது. அதை அனுசரித்து இந்த மாதிரி இன்ஜினியரிங் கல்லூரிகளிலும், டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்டுகளிலும் அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்க சர்க்கார் என்ன திட்டமிட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்பொழுதிருக்கிற சூழ்நிலையைப் பொறுத்தவரை அதிகப்படியான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாமா அல்லது இதே நிலைமையை வைத்துக் கொள்ளலாமா என தொழில் நுட்ப போர்டிடம் கேட்கப்பட்டது. அவர்கள் ஓரளவு உயர்த்தலாம் என்று கூறியிருக்கிறார்கள். அது பரிசிலனையில் இருக்கிறது. இப்பொழுது மாணவர்களை எடுத்தாலும் அதனுடைய விளைவுகளை 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நாம் காண வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்படித் தொழில்நுட்பத்தில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அது அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கழிந்த ஆண்டு இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கு மனுச் செய்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்? இடமில்லாததன் காரணமாக, தகுதி இருந்தும் இடம் கிடைக்கப் பெறாதவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விண்ணப்பித்த மாணவர்கள் மொத்தம் தகுதி படைத்தவர்கள்—4,748 ஆண்கள், 87 பெண்கள்; ஆக மொத்தம் 4,835 பேர். அதில் 1,290 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பல்வேறு வகைகளிலே ஒதுக்கப்பட்டு 1,228 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் இந்தக் குழுவினரால்.

LEGISLATURE LIBRARY
25 OCT 1975
MADRAS

1975 மார்ச் 5]

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்களென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரமில்லை. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய கோட்டா அளவுக்கு அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே பொறியியல் கல்லூரியிலே படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறதா? வேலை வாய்ப்பு கிடைக்காத காரணத்தாலே, மாணவர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்படுகிறதா என்பதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 3, 4 ஆண்டுக்காலத்திற்கு முன்னால் வேலை வாய்ப்பு ஓரளவுக்குக் குறைவாக இருந்தது. அப்பொழுது படித்துவிட்டு வெளியே வந்த பட்டம் பெற்றும் வேலை கிடைக்கப் பெறாமலிருந்தவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தாலே, அகில இந்திய அளவிலே மாணவர்கள் சேர்க்கையை ஓரளவுக்குக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்தது. அதையொட்டி, சேர்க்கப்படுகிற மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைத்தோம். மீண்டும் சிலபல ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதன் காரணமாக, வேலை வாய்ப்பு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது, அதன் காரணமாகத்தான், இப்பொழுது மாணவர்களைச் சேர்க்கின்ற எண்ணிக்கையை உயர்த்தலாம் என்று குறிப்பிட்டார்கள். அதன்படிதான், ரீஜினல் இன்ஜினீயரிங் காலேஜ், திருச்சியில் 180 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தார்கள். அந்த எண்ணிக்கையில் 20-ஐக் கூட்டி, 200 ஆக்கியுள்ளோம். இந்த ஆண்டு கூடிய குழுவினர் அந்த எண்ணிக்கையை இன்னும் கூட்டலாம் என்று, இருக்கிற நிலைமையைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது, இன்ஜினீயரிங், பாலிடெக்னிக் போன்ற படிப்பு படித்தவர்களுக்கு ஓரளவு வேலை வாய்ப்பு வந்திருக்கிறது. ஆகவே, படித்துவிட்டு, அதிகமாக வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்ற நிலை இப்பொழுது இல்லை.

Appointments for blind graduates

* 185 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a blind graduate has been appointed as a College lecturer; and

(*b*) if so, when?